Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 21 | (07-10-1992) | புதன்கிழமை | ஓசை 232

## சென்ற மாத நிவாரணம் வழங்கப்படவில்லை

இராணுவ நடவடிக்கை காரணமாகக் காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு புரட்டாதி மாதத்திற்கான உலர் உணவு இதுவரை வழங்கப்படவில்லை என இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம் யாழ். அரச அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளது. இதனால் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள சுமார் 12000 குடும்பங்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். ஏனைய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உலர் உணவு விநியோகம் இம்மக்களுக்கு வழங்கப்படாமை குறித்து அவர்கள் மிகவும் கவலைகொண்டுள்ளனர். இது குறித்து தீவக நலன்காக்கும் கழகம் அரச அதிபரு (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்திலிருந்து 6,000 துருப்புகள் வடக்கு கிழக்கு எல்லைக்கு இடமாற்றம்

## மண்மீட்பு நிதி பணமாக பெறப்படும்

இம்மாதம் 14ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நேரடியாகச் சென்று மீட்பு நிதி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மீட்பு நிதியாக 10,000 ரூபா பணமாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பவுண் நகைகளோ, காசோலைகளோ பெற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனை மீட்புநிதி செலுத்தவுள்ளோர் கவனத்திற்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ''குமாரி''யில் அத்தியாவசிய உணவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து நேற்றுப் புறப்பட்ட ''குமாரி'' கப்பல் திருக்கோணமலை சென்று ஒரு தொகுதி மாவை ஏற்றிக்கொண்டு இன்னும் சில தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக் கப்பலில் அரிசி, மா. 800 மெற்றிக் தொன் சீனி, (4ஆம் பக்கம் பார்க்க)

## எல்லை பகுதிகளை பாதுகாக்க முயற்சி: புலிகள் தாக்கலாமென அச்சம்

(கொழும்பு)

யாழ். குடா நாட்டில் நிலை கொண்டிருந்த 6,000 சிங்களப் படையினர் வடக்கு - கிழக்கு எல்லைப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் அண்மைக்காலத்தில் மன்னார் வவுனியா, மணலாறு, மட்டக்களப்பு எல்லைப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, மேலும் தாக்குதல்கள் இடம்பெறலாமென கிடைக்கப் பெற்ற புலனாய்வு அறிக்கைகளைக் கொண்டுமே துருப்புக்கள் நகர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிலிருந்து இடமாற்றம் செய்யப்படும் துருப்புக்கள் முக்கியமாக எல்லையோரங்களைப் பாதுகாப்பதில் முனைப்பாக ஈடுபடுத்தப்படும் அதேவேளை மன்னார், மணலாறு, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் புலிகளுக்கெதிரான புதிய இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து அறிய வருகின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் முன்னரைவிட குடாநாட்டிற்கு வெளியில் தீவிரமாகலாமெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதனாலேயே இவ் இடமாற்றம் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது.

## வடபகுதி கப்பல் சேவையை அரைவாசியாக்க அரசு முயற்சி

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பலின் சேவையை இடை நிறுத்தி வைப்பதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவருவதில் ஈடுபட்டிருக்கும் இக்கப்பலை சேவையில் இருந்து இடைநிறுத்தி வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருகிறது.

குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பண்டங்களை எடுத்து வருவதில் 'குமண''. 'குமாரி' ஆகிய இரு கப்பல்களும் தற்போது சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றில் 'குமண'' என்ற கப்பல் சர்வ (4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் பொருள் எடுத்துவர தனியார் துறைக்கு அனுமதி

தனியார்துறை வர்த்தகர்களுக்கு அரசினால் வடபகுதிக்கு தடை செய்யப்படாத பொருள்களை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வர கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது

மேற்படி பொருள்களை

## மன்னார் மாவட்டத்தில் இராணுவ வேலியைக் கைவிட்டு படையினர் பின்வாங்கினர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாத இறுதியில் மாந்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் ஆக்கிரமித்த பகுதியிலிருந்து நேற்று முன்தினம் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி நகரத் தொடங்கிய இராணுவத்தினர் ஆண்டான்குளம், ஆட்காட்டிவெளி, 11-ம் கட்டை, முருங்கன், பரியாரிக்கண்டல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 21 மைல் நீளமான இராணுவ வேலியை அமைத்திருந்தனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிவாரம் இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி வாரம் இன்று ஆரம்பமாகிறது

யாழ், மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

## மண்ணெய் எடுக்குவர

## சவர்க்காரத்தைப் பிளந்து

# வடபகுதி கப்பல் சேவையை அரைவாசியாக்க அரசு முயற்சி

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பலின் சேவையை இடை நிறுத்தி வைப்பதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவருவதில் ஈடுபட்டிருக்கும் இக்கப்பலை சேவையில் இருந்து இடைநிறுத்தி வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருகிறது.

குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பண்டங்களை எடுத்து வருவதில் 'குமண''. 'குமாரி' ஆகிய இரு கப்பல்களும் தற்போது சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றில் 'குமண'' என்ற கடபல் சர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில்பொருள் எடுத்துவர தனியார் துறைக்கு அனுமதி

தனியார்துறை வர்த்தகர்களுக்கு அரசினால் வடபகுதிக்கு தடை செய்யப்படாத பொருள்களை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவர கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது

மேற்படி பொருள்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ள தனியார்துறையினரை யாழ். அரச அதிபர் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி அறிவித்துள்ளார். பொருள்களை கொண்டுவருபவர்களுக்கு ஒரு மெற்றிக்கொன் அளவான பொருள்களிற்கு கப்பல் கட்டணமாக 2850 ரூபாய் அறவிடப்படும் எனத்தெரியவருகின்றது. (பா)

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

## மண்ணெய் எடுத்துவர கூட்டுப்படை அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்பில இருந்து போதிய அளவு மண்ணெய் கொள்வனவு செய்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவர கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி மண்ணெய் கொள்வனவு செய்து கொண்டுவர விரும்பும் சகல பல நோக்குக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசிய பொருள்கள் அனுப்ப அரசு மேலும் நிபந்தனை

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு சிறிலங்கா அரசு மீண்டும் நிபந்தனை விதித்துள்ளது.

குடாநாட்டுக்கு கப்பல்மூலம் அனுப்பி வைக்கப்படும் மா, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு முன்கூட்டியே பணம் செலுத்தும்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ் அரசாங்க அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். பணம் செலுத்தத் தவறினால் மேற்படி அத்தியாவசியப் பொருள்களை குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பது நிறுத்தப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நேற்று யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் வானொலிக

(4ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச பாராளுமன்றத்தில்

# சிறிலங்கா அரசாங்கம் மீது மனித உரிமை மீறல் முறையீடு

சிறிலங்காவில் மனிதஉரிமைகள் மோசமான முறையில் தொடர்ந்தும் மீறப்பட்டு வருவதுபற்றி சர்வதேசப் பாராளுமன்றின் மனித உரிமைகள் குழுவிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் சுவீடனில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்ற அமைப்பின் கூட்டமொன்றில் கலந்துகொண்ட சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவிடம் மனித உரிமை மீறல் பற்றிய விபரங்கள் கோரப்பட்டன.

கூட்டத்தில் கலந்துகொண்ட நான்கு நாடுகளின சபாநாயகர்களே மேற்படி விபரங்களை கேட்டுள்ளார்கள்.

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்த ராஜபக்ஷ, வாசுதேவநாணயக்கார, சீ. வீ. குணரத்ன ஆகியோர் சர்வதேசப்பாராளுமன்றின் மனித உரிமைகள் குழுவினருக்குஅனுப்பியமூன்று அறிக்கைகளிலேயே சிறிலங்காவின் மனித உரிமை மீறல் தொடர்பான அனைத்துத் தகவல்களும் அடங்கியிருந்தன என சுவீடனில நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட ஐ. தே. க பாராளுமன்றஉறுப்பனர் டொனால்ட திசாநாயக்க தெரிவித்தார்

சுவீடனின் தலைநகர் ஸ்டொக்கோமில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் சிறிலங்காவின் சார்பில் சபாநாயகர் எம். எச். மொகமட், தினேஸ் குணவர்த்தன, அனுருத்கரத்வத்த மகேந்திர விஜேரத்ன ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும்கலந்து கொண்டனர்.

சிறிலங்காவில் ஆட்கள் தொடர்ந்து காணாமல

(4 ஆம் பக்கம் பார்க்க)

கப் பெற்ற புலனாய்வு அறிக்கைகளைக் கொண்டுமே துருப்புக்கள் நகர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிலிருந்து இடமாற்றம் செய்யப்படும் துருப்புக்கள் முக்கியமாக எல்லையோரங்களைப் பாதுகாப்பதில் முனைப்பாக ஈடுபடுத்தப்படும் அதேவேளை மன்னார், மணலாறு, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் புலிகளுக்கெதிரான புதிய இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் முன்னரைவிட குடாநாட்டிற்கு வெளியில்தீவிரமாகலாமெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதனாலேயே இவ் இடமாற்றம் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது.

## கொடிவாரம் இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி வாரம் இன்று ஆரம்பமாகிறது

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

மன்னார் மாவட்டத்தில்

# இராணுவ வேலியைக் கைவிட்டு படையினர் பின்வாங்கினர்

(மன்னார்)

மன்னார்மாவட்டத்தில் கடந்த மாத இறுதியில் மாந்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் ஆக்கிரமித்த பகுதியிலிருந்து நேற்று முன்தினம் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி நகரத் தொடங்கியஇராணுவத்தினர் ஆண்டான்குளம, ஆட்காட்டி வெளி, 11-ம கட்டை, முருங்கன், பரிபாரிக்கண்டல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 21 மைல் நீளமான இராணுவ வேலியை அமைத்திருந்தனர்.

( 4 ஆம பக்கம் பார்க்க )

## பூநகரியில் புலிகள் தாக்குதல் அதிகாரி உட்பட 2 படைபலி

(கொழும்பு)

பூநகரி சிறிலங்கா இராணுவ முன்னணிக காவரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதலில் ஓர் இராணுவச் சிப்பாய் அந்த இடத்திலேயே பலியானதாகவும் வேறு இருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த ஒருவர் பின்னர் வைத்தியசாலையில் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

பலியானவர்களில் ஒருவர் அதிகாரி என சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## சவர்க்காரத்தைப் பிளந்து ராணுவம் சோதனை

(வவுனியா)

தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில சவர்க்காரத்தை பிளந்து சோதனை செய்யப்பட்ட பின்னரே அனுப்பி வைக்கப்படுகின்றது.

இப்பகுதி ஊடாக வடபகுதி நோக்கிக் கொண்டு வரப்படும் சவர்க்காரங்களுக்குள் தடைசெய்யப்பட்ட பொருள்கள் கடத்திச் செல்லப்படுகின்றன என்று தகவல் கிடைத்தன்னர் 'சன்லைற்' சவர்க்காரம் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுகின்றது.

வரவுசெலவு திட்ட ஒதுக்கீடு

# பாதுகாப்பு செலவினம் 1700 கோடி ரூபாவாகலாம்

சிறிலங்காவின் வரவு செலவுத்திட்டத்தில் இம்முறை 4640 கோடி ரூபா துண்டு விழுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்புச் செலவீடு குறைக்கப்படவில்லை என்றும், புனர்வாழ்வுப் பணிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கபபட்டிருக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

இராணுவத்தினர் சிகிச்சை பெற

## அனுராதபுர ஆஸ்பத்திரியில் நவீன சிகிச்சை வசதி

(வவுனியா)

அனுராதபுரம் வைத்தியசாலையில் இராணுவம் சிகிச்சைபெறும் வார்ட் நவீனமயப் படுத்தப்படுவதாகவும் இந்தச் சிகிச்சைப்பிரிவில் படுக்கைகளின் தொகை அதிகப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சமீபகாலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து காயங்களுடன் கொண்டுசெல்லப்படும் இராணுவத்தினரின் தொகை அதிகரித்திருப்பதை அடுத்து மேற்படி சிகிச்சைப் பிரிவிற்குப் பல நவீன வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது

வேறொரு பகுதியிலேயே சாதாரணநோயாளர்சிகிச்சை பெற்று வருகின்றனர். இராணுவ சிகிச்சைப் பிரிவில் பொதுமக்கள் அநாவசியமாக நடமாடுவது தடை செய்யப்பட்டுள்ளதாம். இரவுவேளைகளில் இராணுவத்தினர் இப்பகுதியைச் சூழ்ந்துநின்று கண்காணித்துவருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (தி)

## காவல்துறை பணிமனை வல்வெட்டித்துறையில்திறப்பு

தமிழீழக் காவல்துறையின வல்வெட்டித்துறைப் பணிமனை இன்று காலை 7 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. இத்திறப்புவிழா நிகழ்வில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# கொழும்பில் இரகசிய பேச்சு செய்திக்கு புலிகள் மறுப்பு

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதாக வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையுமில்லையென விடுதலைப்புலிகள் இயக்க உத்தியோகபூர்வ பேச்சாளர் தெரிவித்தார்.

அண்மையில் வெளிநாட்டு வானொலிகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்த செய்திகள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் இச்செய்தி ''உண்மைக்குப் புறம்பானது ஆதாரம் எதுவுமற்றது'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

**பெய்யும் மழைநீர் பெயராதிருந்தால் செய்யும் தொழிலும் சிறப்படையும்**

## வரி விளம்பரம்

**Your Watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி/5156)

**ஆண்டு 5 புலமைப்பரிசில்**

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582 Stanley Road Jaffna.
(சி 5169)

**தவறிவிட்டது**

சண்முகானந்தம்மணிமாலா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 695321899V) 3.10.92 அன்று மானிப்பாய்க்கும் – சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்கானை காவல் துறையிடம் ஒப்படைக்கவும். (3324)

**விற்பனையாகின்றன**

இலகு ஆங்கிலம் (English Made Eassy) ஆண்டு 4, 5, 6, ரூ 19-50. இலகுதமிழ் இலக்கணம் ரூ. 12-50 தமிழ்த்தென்றல்யாதுமூரானின் கவிதைகள் ரூ. 20-00 எல்லாப் புத்தக கடைகளிலும் கிடைக்கும். பொற்கமலதேவி பதிப்பகம்.
(3305)

**உடன் விற்பனைக்கு உண்டு**

HIGH LINE PRIMA, BHIRA

கைலைன் வெள்ளை, கறுப்பு, பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3325)

## பூநகரி பலநோக்கு கூட்டுறவுசங்கம்

**22-09-92 திகதிய பத்திரிகை விளம்பரம்**

''பூநகரி ப. நோ. கூ. சங்கம் கிளைக்குழு தெரிவு 1992'' என்ற தலைப்பின் கீழ் 22-09-92 பத்திரிகையில் 4 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவு தொடர்பான புதிய விளம்பரம் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது இப்புதிய விளம்பரத்திற் குறிப்பிட்டுள்ளபடி தேர்தல் நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.
(சி-5179)

## சித்ராலயா இடமாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10-1992 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.
(3311)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை

நடமாடும் வைத்திய சேவைக்கான

**வைத்திய அதிகாரி - தாதி**

மேற்படி வைத்திய அதிகாரிக்கான விண்ணப்பங்கள் வைத்தியத்துறையில் தேர்ச்சிபெற்ற, அனுபவம்வாய்ந்த, இளைப்பாறியவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- செஞ்சிலுவைச்சங்கம், இல. 396, கண்டிவீதி, கிளிநொச்சி.
2. விண்ணப்பமுடிவுதிகதி:- 24.10.1992
3. வேதனம்:- நேரில் கலந்தாலோசிக்கப்படும்

இச் சேவைக்கான தாதியும் தேவைப்படுவதால் தாதித்துறையில் தேர்ச்சிபெற்ற, அனுபவம் வாய்ந்தவர்கள் மேற்கூறிய முகவரி, விண்ணப்ப முடிவு திகதி என்பவற்றிற்கேற்ப விண்ணப்பிக்கவும்.

இல. 396, கண்டி வீதி,
கிளிநொச்சி
02.10.1992.

கௌரவ செயலாளர்
கிளிநொச்சிக்கிளை
(சி/5178)

**உடன்தொடர்பு கொள்ளவும்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்ட காந்திமதி (29 வயது) என்னும் நோயாளியின் உறவினர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்

**ஒருநாள் உண்ணாவிரதம்**

தியாகி திலீபன் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் தமது அலுவலகத்தில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதமொன்றை நடத்தியுள்ளனர். கடந்த இருபத்தைந்தாம் திகதி இடம்பெற்ற இவ் உண்ணாவிரதத்தில் விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர்களின் உரையும், ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் நினைவுரைகளும், கவிதைகளும் இடம்பெற்றன.

## சுயஉற்பத்திக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம்

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுய தொழில் உற்பத்திக் கொடுப்பனவாகிய 4000 ரூபாவை வழங்குவதில்மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி கொடுப்பனவு சம்பந்தமாக யாழ். அரச அதிபர் கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடன்நடாத்திய பேச்சுக்களை அடுத்து கொடுப்பனவு வழங்குவது எனக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது எனினும் தற்பொழுது அரசிற்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி இக் கொடுப்பனவை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## ஓராண்டு நினைவஞ்சலி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவின் வீரச்செம்மல்

**கப்டன் டானி**

[ சின்னத்துரை வசந்தகுமார் (வரதன்) ]

| வீரத்தாயின் மடியில் | தன் வீரநாட்டு மண்ணிற்காக |
|---|---|
| 05.10.1971 | 22.09.1991 |

திதி: 7- 10- 92

மணலாறு மாவட்டத்தில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச் சாவை தழுவிக் கொண்டு மாவீரன் ஆகிவிட்ட கப்டன் டானி!

எம் மண்ணில் கால் வைக்கும் எதிரியை
எதிர்த்துப் பந்தாடப் புறப்பட்டாய்
பச்சைப் பசுமையுடன் - வளம் கொழிக்கும்
மணலாற்றில் மாவீரன் ஆகிவிட்டாய்
ஓராண்டு மறைந்தாலும் ஓயாது உன் புகழ்
வீரப் புகழ் சேர்த்து விட்டாய் டானி!

வடமராட்சி கிழக்கு,
உடுத்துறை,
தாளையடி.

உன்பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்
(3323)

## எடிசன் அக்கடமி

[யாழ் இந்துக்கல்லூரி அருகில்]
41/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

**O/L 92 DEC.**

**கணிதம்**

துரித 2 மாத மீட்டல்

பின்வரும் பகுதிகள் பூர்த்தியாக்கப்படும்.

- அமைப்பு
- நிகழ்தகவு
- அளவியல்
- திரிகோணகணிதம்
- மடக்கை
- கேத்திரகணிதம்

ஆசிரியர்
**பாஸ்கரன்**

சனி, ஞாயிறு 2.00 மணி – 5.00 மணி வரை
ஆரம்பம்: 10 – 10 - 92 சனி 2.00 மணி
(சி-5171)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 07 |
| 12 | 09 |
| 1924 | 1992 |



திருமதி
**பாக்கியம் கிருஸ்ணபிள்ளை**

அன்பின் திருவுருவே பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
உற்றார், உறவினர்கள்

கனகபுரம்,
கிளிநொச்சி.
(3321)

## தங்கள் தரங்களுக்கேற்ற வகையில்..........

நல்யாதமுரானின் கவிதைகள் ரூ. 20-00 எல்லாப் புத்தக கடைகளிலும் கிடைக்கும். பொற்கமலதேவி பதிப்பகம்.
(3305)

உடன் விற்பனைக்கு
உண்டு
HIGH LINE PRIMA,
BHIRA

கைலைன் வெள்ளை, கறுப்பு, பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3325)

செஞ்சிலுவைச்சங்கம், இல. 396,
கண்டிவீதி, கிளிநொச்சி.

2. விண்ணப்பமுடிவுதிகதி:- 24.10.1992

3. வேதனம்:-
நேரில் கலந்தாலோசிக்கப்படும்

இச் சேவைக்கான தாதியும் தேவைப்படுவதால் தாதித்துறையில் தேர்ச்சிபெற்ற அனுபவம் வாய்ந்தவர்கள் மேற்கூறிய முகவரி, விண்ணப்ப முடிவு திகதி என்பவற்றிற்கேற்ப விண்ணப்பிக்கவும்.

இல. 396, கண்டி வீதி,
கிளிநொச்சி
02 10. 1992.

கௌரவ செயலாளர்
கிளிநொச்சிக்கிளை
(சி/5178)

05.10.1971 22 09.1991

திதி: 7- 10- 92

மணலாறு மாவட்டத்தில் நரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டு மாவீரன் ஆகிவிட்ட கப்டன் டானி!

எம் மண்ணில் கால் வைக்கும் எதிரியை
எதிர்த்துப் பந்தாடப் புறப்பட்டாய்
பச்சைப் பசுமையுடன் - வளம் கொழிக்கும்
மணலாற்றில் மாவீரன் ஆகிவிட்டாய்
ஓராண்டு மறைந்தாலும் ஓயாது உன் புகழ்
வீரப் புகழ் சேர்த்து விட்டாய் டானி!

வடமராட்சி கிழக்கு,
உடுத்துறை,
தாளையடி.

உன்பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்
(3323)

28 — 12 — 1924 07 — 09 — 1992



திருமதி
**பாக்கியம் கிருஸ்ணபிள்ளை**

அன்பின் திருவுருவே பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
உற்றார், உறவினர்கள்

கனகபுரம்,
கிளிநொச்சி. (3321)

# தங்கள் தரங்களுக்கேற்ற வகையில்............

## எமது நீண்ட வளமான தொழிற்பாடுகள் விற்பனவுகள்...

## நாட்டரிசி
## தீட்டுப்பச்சை அரிசி
## உடைத்த பச்சை அரிசி
## சம்பா அரிசி

அனைத்தும் மொத்த சில்லறை விற்பனவுகள்

**அத்துடன்:**

நெல் நியாய விலையில் கொள்முதல் செய்பவர்கள்
ஒப்பந்த ரீதியில் நெல் மொத்தமாக குற்றிக் கொடுப்பவர்கள்

அனைத்து தேவைகளின் நம்பிக்கைக்குகந்த இடம்

# ஞானேஸ்வரன் அரிசி ஆலை

இணுவில் (சி-5177)

## நினைவு கூருகின்றோம்...
## 1992-10-07

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை சாம்பல்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கப்டன் றொபின்** (செல்வரெட்ணம் ராஜ்பவான் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு, யாழ்ப்பாணம்)

1986 ஆம் ஆண்டு மணலாறுப் பகுதியில வழிப்பயணத்தின்போது பாம்பு தீண்டியதில் எமைப் பிரிந்த -

★ ராசா (தேவசகாயம் அமலதாஸ் - இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு கற்பகபுரத்தில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பாபு** (பழனி சிவகுமார் - சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா)

**தாஸ்** (செல்லத்துரை ஜோன் டேவிட் - ராசேந்திரம் குளம், வவுனியா)

1989 ஆம் ஆண்டு கரடியனாறுப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**ரோகி** (அ. விஜயகுமார் - கரடியனாறு, மட்டக்களப்பு)

1990 ஆம் ஆண்டு மட்டு- தேற்றாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

மட்டு - பாரதி வீதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு யாழ். கட்டுவன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வின்சன்** (பஞ்சலிங்கம் சிறிரஞ்சன் - உரும்பராய், யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5176)

### சிந்தனைக்கு

ஒரு கையால் வறுமையின் கலசத்திற்குள் சிறு 'பென்னி'யை [நாணயத்தை]ப் போட்டுவிட்டு, மறுகையால் பெரும் 'ஷில்லிங்'கை எடுத்துக் கொள்வான் கபடதாரி.

— ராபர்ட் போபாக்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-07- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிங்கள அரசின் கபடத்தனம்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி நிறுவப்பட்ட மாகாணசபையைக் கலைத்துவிட்டு, அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச செயலகங்களின் அலுவலகங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கும் நடைமுறையில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுவருவதாக சிங்களப் பத்திரிகையான லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது மேலும், அரசின் செலவீனங்களைக் குறைப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்ட மாகாணசபை தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவென முன்வைக்கப்பட்டதொன்றாகும். ஆனால் மாகாணசபை முறை தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போதுமானதாக இல்லை என்பதால் தமிழ் மக்களினாலும், விடுதலைப் புலிகளாலும் முன்னரே நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதாவது, பிறப்பிலேயே குறைபாடான மாகாணசபை வடக்கு - கிழக்கில் அது எப்பொழுதுமே நிறைவுடன் இயங்கவில்லை. அதேவேளை, இனப்பிரச்சினை தீர்விற்காக கொண்டுவரப்பட்ட மாகாணசபை தமிழர் தாயகத்திற்கு அப்பால் ஓரளவு செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாகாணசபை அமைப்பைப் பொறுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே அமைப்பின் கீழ் இருந்ததே இதில் குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும். அதுவும், கிழக்கு மாகாணத்தின் கருத்துக்கணிப்பு இடம்பெறும் வரைக்கும் என்பது சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

இந்நிலையில், மாகாணசபைகள் அமைப்பு கலைக்கப்படுதல் என்பது, சிறிலங்கா அரசாங்கம் கூற முற்படுவதுபோல், நிர்வாகச் செலவீடுகள் அதிகரிப்பு என்பது ஏற்புடையதொன்றல்ல ஏனெனில், மாகாணசபை அமைப்பிற்கு அரசாங்கம் செலவீடு செய்வதைவிட யுத்தத்திற்கெனவும், கேளிக்கை கொண்டாட்டங்கள் என்பனவற்றிற்கும் இதைப்போல் பல மடங்கு செலவு செய்து வரு

## ஆங்கிலம் எமது சமூகத்தில் அன்றும் பயன்பாட்டு கருவியாகவே இருந்தது

**- ஏ. ஜே. கனகரெட்ணா**

(யாழ்ப்பாணம்)

ஆங்கில அறிவைப் பொறுத்தவரை பழைய காலத்தோடு ஒப்பிடப்போது தரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளதாகச் சிலர் கருதுகிறார்கள். ஆங்கிலம் போதனா மொழியாக இருந்த காலத்தில் நிலவிய தரத்தினை நாம் இன்று எதிர்பார்ப்பது எதார்த்தமற்ற செயலாகும். ஆங்கிலம் போதனா மொழியாக இருந்த காலத்தில் நாம் எந்த அளவிற்கு அதில் தேர்ச்சி பெற்றிருந்தோம் என்ற கேள்வியை நாம் எம்மையே கேட்டுக்கொண்டால் ஆங்கிலம் எமக்கு வெறும் பயன்பாட்டுக் கருவியாகத்தான் இருந்ததே ஒழிய கற்பனை வெளியீட்டுக்கு ஒரு சாதனமாக அது அமையவில்லை என்ற உண்மை புலனாகிறது விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே ஆங்கிலத்தைத் தமது படைப்பாற்றலுக்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்தினார்கள்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளரும், புனித பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் மாணவரும், ஆசிரியருமான ஏ. ஜே கனகரெட்ணா, அக்கல்லூரி ஆங்கில தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது கூறினார். ஏ. ஜே கனகரெட்ணா மேலும் கூறியதாவது:

★ ஆங்கில அறிவு இன்று திருப்திகரமான நிலையில் இல்லையென்றால் அதற்கு ஒரு காரணம் அரசுகள் கடைப்பிடித்து வந்த கொள்கையாகும். அரசு மாறியதும் பாடநூல்களும் மாறுகின்றன. இதனால் ஆங்கிலம் கற்பித்தலின் ஒரு தொடர்ச்சியைப் பேண முடியாதிருக்கின்றது, அத்துடன் பாடநூல்களும் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டவல்லனவாக இல்லை.

★ ஒரு மொழி கற்பதற்கும் வேறு பாடங்கள் கற்பதற்கும் உள்ள ஒரு வேறுபாட்டை மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி உணர்வதாகத் தெரியவில்லை. ஆசிரியர் கொடுக்கும் குறிப்பைப் பாடமாக்கிப் பரீட்சையில்சித்தியடையலாம். ஆனால் ஒரு மொழியை அவ்வாறு கற்றல் முடியாது. இலக்கண விதிகளைத் தெரிந்துகொண்டால் அம் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளதாக பலர் தவறுதலாக எண்ணுகின்றார்கள் இத்தகைய மாயையைச் சில ரியூட்டரிகள் தமது ஆதாயம் கருதி வளர்க்கின்றன. இலக்கணம் இன்றி மொழியில்லை, ஆனால் வெறுமனே இலக்கணம் மொழியாகாது

★ நான் கல்வி கற்ற காலம் ஆங்கிலம் தான் போதனா மொழியாக இருந்த காலம். அப்போது தமிழில் கதைப்பதே தண்டனைக்குரிய செயலாக கணிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற அச்சடிக்கப்பட்ட வாசகங்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒட்டப்பட்டிருந்தன இன்றோ நிலைமை முற்றிலும் வேறாகும். அன்னைமொழி மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்ற கொள்கை பல்கலைக்கழகம் உள்ளிட்ட எல்லாக்கல்வி நிலையங்களிலும் அது நடைமுறையில் உள்ளது இன்று, இத்தகைய சூழலிலே ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும், ஏன் ஆங்கில தினம்கொண்டாடப்படவேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

★ இலக்ட்றோனிக் தொடர்பு சாதனங்களால் உலகம் ஒரு கிராமமாகசுருக்கப்பட்டுவிட்ட இன்றைய யுகத்தில் நாம் வாழ்கிறோம். நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் என்ன ஏனைய நாடுகளுடன் தொடர்பு கொள்ளாமல் இருத்தல் முடியாது இவ்வாறுதொடர்பு கொள்வதற்கு வரலாறு எமக்களித்த ஒருகருவியாக ஆங்கில மொழியைநாம் கொள்ளலாம். ஆங்கிலமே முன்னணி சர்வதேச மொழி அதன் ஊடாக விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளிலே ஏற்படும் வளர்ச்சிகளை நம் அறிந்துகொள்ள முடியும். ஆகவே பயன்பாடு கருதி, குறிப்பாகப் பொருளாதார பயன்பாடு கருதி நாம் ஆங்கிலத்தைக் கற்பது அவசியமாகின்றது. இவ்வாறு கற்பது எவ்விதத்திலும் அன்னை மொழிக்கு ஊறு செய்யாது.

★ இங்கு கூடியிருக்கும் மாணவருக்கு நான் கூறக்கூடிய ஒரே அறிவுரை இதுதான் பழைய கதைகளிலே பொக்கிஷம் காக்கும் பூதங்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப் பாடசாலையில் உள்ள நூல் நிலையம் இப் பகுதிப் பாடசாலை நூல் நிலையங்களில் முன்னணியில் நிற்பதாகக்கணிக்கப்பட்டது இன்றும் அவ்வாறுதான் இருக்கும் என்று நானினைக்கிறேன். அங்குள்ள ஆங்கில நூல்களில் பொதிந்திருக்கும் செல்வத்தை நீங்கள் பெறவேண்டுமானால், ஆங்கிலத்தில் தேர்ச்சியின்மை என்ற பூதத்தினை நீங்கள் கொல்ல வேண்டும் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சிக்கு உறுதுணையாக மட்டுமே அமைய முடியும்.

கல்லூரி அதிபர் வண. ஏ.ஜ பேணாட் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் சிறிலங்கா இராணுவம்

**சண்டே ரைம்ஸ் சாடல்**

(கொழும்பு)

பத்து இராணுவத்தினர் உயிர் இழந்தால் பதினைந்து நவீன ரக ஆயுதங்கள் புலிகளிடம் போய்ச் சேருகின்றன. இந்த வகையில் கணக்கிட்டால் நூறு இராணுவத்தினர் கொல்லப்பட்டால் சுமார் நூற்றைம்பது நவீன ரக ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டு விடும் என்று சண்டே ரைம்ஸ் தனது ஆசிரியர் தலை

ரக ஆயுதங்களும் போய்ச் சேருகின்றன

அத்துடன் இராணுவத்தில் உயிரிழப்பது ஒருவரே ஆனாலும் அவரது குடும்பம் தனிமைக்கு உள்ளாவதுடன் முழுக் குடும்பத்தினரும் அவதியுற நேரிடுகிறது ஏற்கனவேசேவையில் இல்லாதவர்களான மூன்று பட்டாலியன் துருப்

வளவு பெரிய தொகை செலுத்தப்பட்டாலும் ஈடாகாது என்பதும் ஒருபுறமிருக்கிறது.

அண்மையில் காயப்பட்ட ஒரு இராணுவத்தினருடன் உரையாடும்போது ஆகஸ்ட் எட்டுசம்பவம்இராணுவத்தின் மனநிலையில் ஏற்படுத்திய பாதிப்பு பற்றி வினவியபோது போர்க்களத்திலிருந்து உயிரு

## பென்சன் வவுச்சர் விநியோகம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியக்காரர்களுக்கு ஒக்டோபர் மாதத்திற்கான வவுச்சர்கள் ஏற்கனவே யாழ். செயலகம் எடுத்து வரப்பட்டும், அவற்றை உரிய காலத்தில் போதிய பணம் இல்லாமையினால் உரியவர்களுக்கு விநியோகிக்க முடியாமல் இருப்பதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வழமைபோல் பென்சன் வவுச்சர்கள் 10-ம் திகதி விநியோகிக்கப்பட இருந்தது. எனினும் போதிய பணம் இல்லாமையினால் மேலும் தாமதமாகும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## மடுப்பகுதி அகதிகள் குடிநீரின்றி அவதி

[வவுனியா]

பன்னார், அடம்பன், ஆண்டான்குளம் பகுதிகளில் சிறிலங்கா படையினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து சுமார் இரண்டாயிரம் பேர் இடம்பெயர்ந்து மடுப்பகுதியில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சுமார் 29,000 அகதிகள் தங்கியுள்ள மடு அகதி முகாம் பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது வவுனியாவில் இருந்துதம்பனை வரையிலான பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகின்றபோதிலும் மடுப்பகுதியில் தொடர்ந்தும் கடும் வரட்சி நிலவுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**பாராளுமன்ற சிறாவஸ்தி**

## ஊழியர்கள் தகராறு உறுப்பினர்கள் பட்டினி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் வதிவிடமான சிறாவஸ்தி ஊழியர் ஒருவருக்கும் நுழைவாயிலில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாருக்கும் இடையில் உண்டான தகராறு காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு நாட்கள் பட்டினி இருக்க நேர்ந்தது.

சிறாவஸ்தி விடுதிக்கு ஊழியர் ஒருவர் உறவினரை அழைத்துச் சென்றபோது பொலிசார் அவருக்கு அனுமதி வழங்க மறுத்தனர். இது தொடர்பாக ஊழியருக்கும் பொலிசாருக்குமிடையில் தகராறு முற்றவே பொலிசார் ஊழியரைக் கைதுசெய்து பொலிஸ் வாகனத்தில் பக்கத்திலுள்ள பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இதனை ஆட்சேபிக்கும் வகையில் சிறாவஸ்தி விடுதி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதனால் உணவு கிடையாத பாராளுமன்ற உறுப்பினர்கள்சிறாவஸ்திக்குப் பின்புறமாகவுள்ள புளாவர் றோட்டிலுள்ள சைவக் கடையில் தோசை மற்றும் தின்பண்டங்களைச் சாப்பிட்டுத் தமது பசியைத் தீர்த்துக் கொண்டனர். இரு நாட்கள் நீடித்த வேலை நிறுத்தம் சமரசப் பேச்சுவார்த்தைகளின் பின் கைவிடப்பட்டது.

### சுதந்திரக்கட்சி பிளவுறும்?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரைவில் பிளவுபடலாம் என்ற அச்சம் கட்சித் தலைமைக்குள் தோன்றியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கட்சி மாறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை 1994 டிசம்பரில் நடைபெறவிருக்கும், ஜனாதிபதித் தேர்தலின் போது சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக, திரு. அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப்படலாம் என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

## உடுகம்பொல வீட்டு கதவுகள் உடைப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவுக்கு முன்னர் வழங்கப்பட்டி

இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க பின்னரே மேஜர் உடுகம்பொல மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

னரே நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதாவது, பிறப்பிலேயே குறைபாடான மாகாணசபை வடக்கு - கிழக்கில் அது எப்பொழுதுமே நிறைவுடன் இயங்கவில்லை. அதேவேளை, இனப்பிரச்சினை தீர்விற்காக கொண்டுவரப்பட்ட மாகாணசபை தமிழர் தாயகத்திற்கு அப்பால் ஓரளவு செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாகாணசபை அமைப்பைப் பொறுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே அமைப்பின் கீழ் இருந்ததே இதில் குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும். அதுவும், கிழக்கு மாகாணத்தின் கருத்துக்கணிப்பு இடம்பெறும் வரைக்கும் என்பது சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

இந்நிலையில், மாகாணசபைகள் அமைப்பு கலைக்கப்படுதல் என்பது, சிறிலங்கா அரசாங்கம் கூற முற்படுவதுபோல், நிர்வாகச் செலவீடுகள் அதிகரிப்பு என்பது ஏற்புடைய தொன்றல்ல ஏனெனில், மாகாணசபை அமைப்பிற்கு அரசாங்கம் செலவீடு செய்வதைவிட யுத்தத்திற்கெனவும், கேளிக்கை கொண்டாட்டங்கள் என்பனவற்றிற்கும் இதைப்போல் பல மடங்கு செலவு செய்து வருகின்றது ஆகையினால், அரசாங்கம் மாகாணசபை அமைப்பைக் கலைத்துவிட மேற்கொள்ளும் முயற்சியானது சிங்கள பேரினவாதத்தின் எண்ணத்தின் பாற்பட்டதே.

மாகாண சபைகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தரப்போவதில்லை என்பது உண்மை. இதனைக் கலைப்பதினால், தமிழ்மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதும் உண்மையானதே. ஆனால், இதைக்கலைக்க முற்பட்டு நிற்கும் அரசாங்கத்தின் செயல் சிங்களப்பேரினவாதத்தின் கபடத்தனமாகும்

மாகாணசபை அமைப்பு ஏற்படுத்தப்பட்ட போதே சிங்கள எதிர்க்கட்சிகள் அதை எதிர்த்தன அதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படுவதை அவை வன்மையாக எதிர்த்தன. இதனை ஆட்சியில் இருந்த, அதாவது மாகாணசபை உருவாக்கத்திற்கு வழி செய்த இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜே ஆர். ஜெயவர்த்தனாவே ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு-கிழக்கு இணைப்பிற்கான கருத்துக் கணிப்பின்போதுதான் எதிர்த்தேபிரசாரம் செய்யப்போவதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இன்று வடக்கு - கிழக்கு மாகாணசபை செயலிழந்துள்ள வேளையிலும் வடக்கு - கிழக்கு மாகாணசபை என்ற ஒரு நிர்வாக அலகு இருப்பது சிங்களப் பேரினவாதிகளுக்கு அச்சத்தை யூட்டியுள்ளதுபோல் தெரிகிறது. வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து கருத்துக் கணிப்பு அண்மையில் நடைபெற வாய்ப்பு இல்லாததினால் அவ் அமைப்பையே கலைத்து விடச் சிங்கள பேரினவாத அரசாங்கம் எண்ணியுள்ளதுபோல்தெரிகிறது இதன்மூலம் கருத்துக் கணிப்பு ஒன்றே தேவையில்லை என்ற நிலையையே உருவாக்கி விடலாம் என்பது குறிப்பிடத்தக்கது

அதாவது தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு என முன்வைக்கப்பட்ட - தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட -. ஒரு மிகக் குறைந்தபட்ச தீர்வுத் திட்டத்தைக் கூட சிங்களப் பேரினவாதத்தினால் அங்கீகரிக்கவோ, நடைமுறைப்படுத்தவோ முடியவில்லை. இந்நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை சிறிலங்கா முன் வைக்கும் என எதிர்பார்ப்பதில் அர்த்தமெதுவுமில்லை.

---

கும். அரசு மாறியதும் பாட நூல்களும் மாறுகின்றன. இதனால் ஆங்கிலம் கற்பித்தலின் ஒரு தொடர்ச்சியைப் பேண முடியாதிருக்கின்றது, அத்து

கைய சூழலிலே ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும். ஏன் ஆங்கில தினம்கொண்டாடப்படவேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

★ இலக்ட்றோனிக் தொட

பூச்சிக்கு உறுதுணையாக மட்டுமே அமைய முடியும்.

கல்லூரி அதிபர் வண. ஏ.ஜ பேணாட் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

# புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் சிறிலங்கா இராணுவம்

## சண்டே ரைம்ஸ் சாடல்

(கொழும்பு)

பத்து இராணுவத்தினர் உயிர் இழந்தால் பதினைந்து நவீன ரக ஆயுதங்கள் புலிகளிடம் போய்ச் சேருகின்றன. இந்த வகையில் கணக்கிட்டால் நூறு இராணுவத்தினர் கொல்லப்பட்டால் சுமார் நூற்றைம்பது நவீன ரக ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டு விடும் என்று சண்டே ரைம்ஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதாவது, இராணுவத்திற்குப் புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்காக உயர் இராணுவ அதிகாரிகள் சிரமப்படும் வேளையில் புலிகளுக்கு நவீன ரக ஆயுதங்களும் போய்ச் சேருகின்றன

அத்துடன் இராணுவத்தில் உயிரிழப்பது ஒருவரே ஆனாலும் அவரது குடும்பம் தனிமைக்கு உள்ளாவதுடன் முழுக் குடும்பத்தினரும் அவதியுற நேரிடுகிறது ஏற்கனவேசேவையில் இல்லாதவர்களான மூன்று பட்டாலியன் துருப்புக்களுக்கு இராணுவத்தினர் செலவிட நேரிட்டுள்ளது. அதாவது 3500 பேருக்கான ஓய்வூதியம் என்றும், நட்டஈடு என்றும் செலுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. எவ்வளவு பெரிய தொகை செலுத்தப்பட்டாலும் ஈடாகாது என்பதும் ஒருபுறமிருக்கிறது.

அண்மையில் காயப்பட்ட ஒரு இராணுவத்தினருடன் உரையாடும்போது ஆகஸ்ட் எட்டுசம்பவம்இராணுவத்தின் மனநிலையில் ஏற்படுத்திய பாதிப்பு பற்றி வினவியபோது போர்க்களத்திலிருந்து உயிருடன் திரும்பி வருவோமோ என்பது சாதாரண இராணுவத்தினர் மத்தியில் கேள்வியாகியுள்ளது என்றும் சண்டே ரைம்ஸ் தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

# கடந்த ஒன்பது மாதங்களில் 827 இராணுவம் பலி

## கூட்டுப்படை அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஒன்பது மாதகாலத்தில் 827 சிறிலங்கா ராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையக அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

செப்டம்பர் மாதத்தில் மாத்திரம் 97 ராணுவத்தினர் இறந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல்செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# முகாம்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்மருதடி பிள்ளையார் கோவிலில் தஞ்சமடைந்திருந்த 60 அகதிக் குடும்பங்களுக்கு ''விநாயகர் முகாம்'' என்னும் பெயரில் 60 கொட்டில்களும் பற்றி மாதா கோவிலில் தஞ்சமடைந்திருந்த 60 குடும்பங்களுக்கு ''கேவின் காமம்'' முகாம் என்னும் பெயரில் 60 கொட்டில்களும் அமைத்துக்கொடுக்கும் வேலைகளில் அகதிகள் புனர்வாழ்வுக் கழக யாழ் கிளையினர் ஈடுபட்டு வருகின்றனர். (42)

## குழாய்க் கிணறுகள் அமைப்பு

யாழ். மாநகரம் பகுதியில் குடிதண்ணீர் விநியோகத்தை சீர்செய்யும் வகையில் புதிதாக 12 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் இரண்டை யாழ் மாநகரசபை அமைக்கும். ஏனைய 10 கிணறுகளையும் அமைக்கும் செலவை 'யுனிசெப்' ஏற்றுக்கொள்ளும்.

எழிலூர், திருநகர், மகேந்திரபுரம் கிறீன்லட் ச.ச. நிலையப் பகுதி, பாசையூர், நாவாந்துறை, அரியாலை, முத்திரச்சந்தி, கணேசன் தோட்டப் பகுதி கொழும்புத்துறை, ஈச்சமோட்டை ஆகிய இடங்களிலேயே இக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர மேலும் பல குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கும் யாழ் மாநகரசபை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் உதவியை கோரியுள்ளது. (42)

யாழ். வைத்தியசாலை

# முறிவு நெரிவு சிகிச்சைபிரிவு செயலிழக்கும் நிலை

யாழ் போதனா வைத்திய சாலையிலுள்ள முறிவுநெரிவு சிகிச்சை உபகரண தொழிற்பிரிவு முற்றாகச் செயலிழக்கும் நிலை உருவாகியுள்ளது.

எலும்பு முறிவு நெரிவு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும்போது பயன்படுத்தப்படும் அலுமினியத் தகடு மற்றும் பல முக்கிய உபபொருள்களை இங்கு எடுத்து வருவதற்குக் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துவருவதே இந் நிலை ஏற்படுவதற்குக் காரணமாகும்.

இத்தொழிற் பிரிவு நிலையத்திலிருந்த பொருள்களின் கையிருப்பு தற்சமயம் முற்றாகத் தீர்ந்துவிட்டதால் அது முழுமையாகச் செயலிழக்கும் நிலையை அடைந்திருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (42)

# கைத்தொழில் வேலைத்தளம் அமைக்கப்படும்

யாழ் கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞானம், மரவேலை உலோக வேலைகளுக்கான வேலைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

இந்த வேலைத்தளத்திற்கான பொறுப்பதிகாரியாக கல்வித்திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். கமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் விஞ்ஞானம், மரவேலை உலோக வேலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் உதவி புரிந்து இத்துறைகளை மேம்படுத்தச் செய்யும் வகையிலேயே இந்த வேலைத்தளம் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (42)

---

பொலிசார் அவருக்கு அனுமதி வழங்க மறுத்தனர். இது தொடர்பாக ஊழியருக்கும் பொலிசாருக்குமிடையில் தகராறு முற்றவே பொலிசார் ஊழியரைக் கைது செய்து பொலிஸ் வாகனத்தில் பக்கத்திலுள்ள பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இதனை ஆட்சேபிக்கும் வகையில் சிறாவஸ்தி விடுதி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதனால் உணவு இடையாத பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறாவஸ்திக்குப் பின்புறமாகவுள்ள புளாவர்

விரைவில் பிளவுபடலாம் என்ற அச்சம் கட்சித் தலைமைக்குள் தோன்றியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கட்சி மாறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை 1994 டிசம்பரில் நடைபெறவிருக்கும், ஜனாதிபதித் தேர்தலின் போது சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக, திரு அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப்படலாம் என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

# உடுகம்பொல வீட்டு கதவுகள் உடைப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு பாதுகாப்பு வழங்குமாறு அவரது சகோதரர் இராணுவ மேஜர் உடுகம்பொல பொலிசாரிடம் கேட்டுள்ளார்.

பூட்டப்பட்டிருந்த மேற்படி வாசஸ்தலம் அண்மையில் இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்த பின்னரே மேஜர் உடுகம்பொல மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமது சகோதரர் வீட்டில் இல்லாததால் கொழும்பு கறுவாத்தோட்டப் பொலிஸ் பகுதியிலுள்ள மேற்படி வீட்டுக்கு தாம் அடிக்கடி சென்று அதனை கண்காணித்து வந்ததாகவும் மேஜர் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

ஆடைத் தொழிற்சாலையின்

# மேல்மாடி இடிந்து விழுந்தது; தொழிலாளர் பலர் காயம்

(கண்டி)

டிக்கோயாவைச் சேர்ந்த தரவளை குறூப் தேயிலைத் தோட்டத்தில் இயங்கி வந்த ஆடைத் தொழிற்சாலையின் மேல் மாடி இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதேவேளைஇக்கட்டடம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

# புரிந்துணர்வும், நட்புணர்வும் இருந்தால் பிரச்சினை தீரும்

## அஷ்ரப் அஸீஸ்

''தோட்டத்தொழிலாளர்களின் நலன் கருதி எத்தனை தொழிற்சங்கங்கள் அமைத்தாலும் தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகள் தீராமல் இருப்பதற்கு அவர்களிடையே புரிந்துணர்வும், நட்புணர்வும் நல்லெண்ணமும் இல்லாமையே இதற்கு காரணம்'' என அஸீஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸீஸ் பதுளையில் நடைபெற்றதோட்டக்கமிட்டி தலைவர்கள் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து ஒரே சக்தியாக தம் கோரிக்கைகளுக்கு குரல் கொடுக்காதவரை பிரச்சினைகளில் இருந்து தோட்டத் தொழிலாளர் விடுதலை பெற முடியாது.

தோட்டங்கள் தனியார் வசம் ஒப்படைக்கப்படும் போது அது தொடர்பாக மறுசீரமைப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம். மறுசீரமைப்பு அதிகாரி பாஸ்கரலிங்கம் இது தொடர்பாக எந்த பிரச்சினையும் தலைதூக்க நியாயமில்லை என்று உறுதி தந்தார்.

ஆனால் இன்று நிலைமை வேறு கோணத்தில் போய்க் கொண்டிருக்கிறது. இன்று தொழிலாளர்களிடையே பதற்றமும் அவநம்பிக்கையுமே நிலவுகின்றது எனவும் தெரிவித்தார்.

# மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கும் தலா மூன்று லீற்றர் 30 ரூபா வீதம் மண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

ஈழநாதம்

ஆசிரியர் சம்பளத் திட்ட

# கோரிக்கை ஏற்கும் வரை போராட்டம் தொடரும்

## - தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சம்பள மீளாய்வுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட சம்பளத்தை அரசு நிறைவேற்றாமையை கண்டிக்குமுகமாக சகல ஆசிரிய தொழிற்சங்கங்களும் இணைந்து போராட முன்வந்துள்ளன. இப்போராட்டத்தின் முதல் கட்டமே அரசினால் ஏற்படுத்தப்பட்ட சகல சர்வதேச ஆசிரியர் தின நிகழ்ச்சிகளை பகிஷ்கரித்தமை ஆகும்.

இப்போராட்டம் பகிஷ்கரிப்புடன் மாத்திரம் முடியாது, அரசு சம்பளத் திட்டத்தை அமுல் நடாத்தி முடிக்கும் வரை பல்வேறு வடிவத்தில் மாற்றம் அடைந்து அரசின் மேல் பல்வேறுவகையான அழுத்தங்களைக் கொடுக்கும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஆசிரியர் சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று நாடு பூராவும் நடாத்தப்பட விருந்த ஆசிரிய தின நிகழ்ச்சிகள் அரசினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதுபோராட்டத்தின் முதல் கட்டம் முழுமையாக வெற்றிபெற்றுள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் இணைந்து நிற்கின்றார்கள் என்பதை அரசுக்கு உணர வைத்துள்ளது.

இப்போராட்டத்தில் ஒத்துழைத்த சகல ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இதற்காக எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ளத் தயாராகும்படியும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். பல்கலையில்

# சிறப்பு கலை கற்கைக்கு சமுகவியல் ஒரு பாடமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகம் 1990-91 கல்வியாண்டில் முதலாம் வருடத்தில் சமுகவியலை ஒரு பாடமாக கற்ற கலைப்பீட மாணவர்களுக்கு இரண்டாம் வருடத்தில் இருந்து சிறப்புக் கலைக்கு அனுமதிக்க யாழ். பல்கலைக்கழக மூதவை நடவடிக்கை எடுத்துவருகிறது

கடந்த வருடத்தில் இருந்தே முதன்முறையாக யாழ். பல்கலைக் கழகத்தில் சமுகவியலை முதலாம் வருட மாணவர்களுக்கு கற்கும் வாய்ப்பை பல்கலைக்கழக மூதவை ஏற்படுத்திக் கொடுத்தது.

இதேவேளை சமுகவியலை ஒரு பாடமாக கற்ற முதலாம் வருட மாணவர்கள் தம்மை சிறப்புக்கலைக்கு 1991 - 92 கல்வியாண்டில் இருந்து அனுமதிக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளனர் (05)

# தங்கம் கொண்டு வந்தவர் இராணுவத்தால் கைது

(வவுனியா)

கொழும்பிலிருந்து தங்கம் கொண்டு வந்த வடபகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் பெண் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 4ஆம் திகதிகொழும்பிலிருந்து இரண்டு கட்டித் தங்கம் (பிஸ்கட் பவுண்) மற்றும் மூன்று சிங்கப்பூர் சங்கிலி கொண்டு வந்தவரே கைதானார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த கதிரமலை புஷ்பமலர் (47) என்பவரே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரின் தற்போதைய நிலைபற்றி அறியப்படவில்லை. (தி)

திருமறைக் கலாமன்றம்

நடாத்தும்

# திருடர்கள் பிடிபட்டனர்

(குருநகர்)

இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம்பெயர்ந்துள்ள குருநகர் மீன்சந்தைப்படுத்தும் வாடியை அண்மித்த பகுதி வீடுகளில் பட்டப்பகலில் திருட்டில் ஈடுபட்ட இரு இளைஞர்களைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது. திருடிய பொருள்களுடன் மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரும் பின்பு தமிழீழக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (21)

## காட்சி பொருள்களை 12-ம் திகதிக்கு முன் ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் எதிர்வரும் 14-ம் திகதி நடைபெற இருக்கும் ஓவிய சிற்பக் கண்காட்சிக்குப் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட பாடசாலைகள் தத்தமது பாடசாலையின் காட்சிப் பொருள்களை எதிர்வரும் 12-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பாடசாலை நேரத்தில் ஒப்படைக்கும்படி அறிவிக்கப்படுகின்றது.

## சேவைக்கால கருத்தரங்கு

வரலாறும் சமூகக் கல்வியும் பாடத்திற்கான சேவைக் காலக் கருத்தரங்குகள் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

யாழ்ப்பாணம் வேலணைக் கோட்டத்தில் 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ் இந்துக்கல்லூரியிலும், பண்டத்தரிப்புக் கோட்டத்தில் 10ஆம், 11ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் மருதனார் மடம் கோட்டத்தில் 13ஆம், 14ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சிக்கோட்டத்தில் 15ஆம், 16 ஆம் திகதிகளில் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சிக் கோட்டத்தில் 19ஆம், 20ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. கருத்தரங்கு முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறித்த கோட்டத்திலுள்ள சகல பாடசாலை சமூகக்கல்வி ஆசிரியர்களையும் சமூகக்கல்வி ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## பொலிஸ் தற்கொலை

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய விடுதியில் இருந்த றிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிளான வன்னிநாயக ராஜபக்ஸ (வயது 22) என்பவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நிக்கரவெட்டியைச் சேர்ந்த மேற்படி கான்ஸ்டபிள் வயிற்றுவலி காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விசாரணை டிசம்பரில்

கொழும்பில் கூட்டுப் படைகளின் தலைமையகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணைகள் டிசம்பர் ஏழாம்

## தஞ்சாவூரில் ஒருவர் கைது

# தொண்டமானின் கருத்து; லிபரல் கட்சி கவலை

(கொழும்பு)

சமஷ்டி அரசியலமைப்பொன்றை ஏற்கமுடியாதென அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளதையிட்டு லிபரல் கட்சி ஆச்சரியமும் கவலையும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக லிபரல்கட்சியால் வெளியிடப்பட்டுள்ள அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமஷ்டி அமைப்பை சிங்கள மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருப்பதுமறுக்க முடியாத யதார்த்த நிலையில் தமது கொள்கைகளை மீள் பரிசீலனை செய்ய விரும்பாத குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட ஒருமாயை என்றே லிபரல் கட்சி கருதுகின்றது.

அரசியலமைப்பிற்கு உட்பட்ட விதமாகசிங்களப்பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளும் ஒன்றே, ஒரேயொரு தீர்வாக அமையுமென அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார். 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பை பெரும்பான்மையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற கருத்திலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இந்த அரசியலமைப்பு இன்று மக்கள் மத்தியில் நம்பிக்கையிழந்த ஒரு ஆவணமாக உள்ளது என்றே நாம் கருதுகிறோம். என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடிவாரம்

பிரிவுகளிலும் உள்ள பிரிவுக் கிளைச் சங்கங்கள் இக்கொடி வாரத்தில் துரிதமாகச் செயல்பட்டு, நலிவுற்றோருக்குத் தாராளமாக உதவுதல்நன்மை தரும் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் திரு. எஸ். சிங்கராயர் பிரிவுக் கிளைகளுக்கும், பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இராணுவ

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இவ்விடங்களில் இருந்து பின்வாங்கிச் செல்லத் தொடங்கினர்.

வேப்பங்குளம், பரியாரிக் கண்டல், முருங்கன் ஆகிய இடங்களில் தரித்து நின்ற இராணுவத்தினர் மன்னார், மதவாச்சி வீதி வழியாக சென்று உயிலங்குளத்திலும்,

பாலைப்பெருமாள் கட்டு, வட்டக்கண்டல் ஆட்காட்டி வெளி, அடம்பன் ஆகிய பகுதிகளில் இருந்த இராணுவத்தினர் மாந்தை அடம்பன் வீதி வழியாகச் சென்று அடம்பனிலும் தரித்து நிற்கின்றனர்

நானாட்டானிலிருந்து சூரிய கட்டைக்காடு, இலந்தை மோட்டை வீதி வழியாக உயிலங்குளம் அடங்கிய பகுதியிலும், சிறுநாவற்குளத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர்உயிலங்குளம் பாலைக்குழி அடம்பன் அடங்கிய வீதி வழியிலும் தரித்து நிற்கின்றனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி ஆண்டான்குளம் பகுதியில்

# கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சை

## அக்டோபர் 15க்கு முன் விண்ணப்பிக்கவும்

(கொழும்பு)

பாடசாலைகளில் 9 ஆம் ஆண்டு (8 ஆம் வகுப்பு) மாணவர்களுக்கு நடைபெறவுள்ள கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ்ப் பரீட்சை -1992 டிசம்பருக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 1992அக்டோபர் 15 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத அதிபர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையுடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# மாவீரர் நாளையொட்டி பேச்சு, பாட்டுப் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் பேச்சு, பாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன பாடசாலை மாணவர் மட்டத்தில் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பேச்சுப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் ஆறு பிரிவுகளாக நடாத்தப்படும். ஆண்டு1,2 பாலர் பிரிவு, ஆண்டு 3,4,5, அதிகீழ் பிரிவு, ஆண்டு 6,7 கீழ்ப்பிரிவு, ஆண்டு 8,9 கனிஷ்டபிரிவு, ஆண்டு 10.11, 11 மீட்டல் வகுப்பு மேற்பிரிவு, ஆண்டு 12, 13, 13 மீட்டல் வகுப்பு அதி மேற்பிரிவு என இவை வகுக்கப்பட்டுள்ளன.

பேச்சுப் போட்டிகள் குறித்த பாடசாலையின் மாவீரர் பற்றி, பாடசாலைச்சுற்றாடலில் மாவீரர்பற்றியதாக அமையும் இவ் விடயங்களில் மாணவர் போட்டிகளில் பங்கு பற்றலாம்.

பாட்டுப் போட்டிகளில் தமிழீழ புரட்சிப்பாடல்கள் இடம் பெறும். ஒருவர் 10நிமிடத்திற்கு மேற்படாது ஒரு பாடலை மட்டும் பாடலாம்.

இப் போட்டிகளை நடாத்துவதில் பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்களின் ஒத்துழைப்பை மாணவர் அமைப்பு கோரியுள்ளது.

கொழும்பில்

# தூதுவராலயங்களை திறக்க அராபிய நாடுகள் தயக்கம்

(கொழும்பு)

அரேபிய நாடுகள் பல கொழும்பில் தமது தூதுவராலயங்களைத் திறக்கத் தயங்குவதாகத் தெரிவிக்கப் படுகிறது,

சிறிலங்கா அரசு இது தொடர்பாக அரேபிய நாடுகளுடன் பல முறை தொடர்புகொண்டும் அந்த நாடுகள் சிறிலங்கா அரசின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கவில்லை என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரி

நாடுகளில் இலங்கையர் அதிகமாகத் தொழில்பார்ப்பதால் இந்த நாடுகள் தமது தூதுவராலயங்களைத் திறகக வேண்டும் என்பது கொழும்பின் எதிர்பார்ப்பாகும், இந்த நாடுகளுக்கு சிறிலங்காவுககும் இடையில் வர்த்தக உறவுகள் நெருக்கமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகும் வளைகுடா நாடுகள் கொழும்

றெப்புக் கலைக்கு அனுமதிக்க யாழ். பல்கலைக்கழக மூதவை நடவடிக்கை எடுத்துவருகிறது

கடந்த வருடத்தில் இருந்தே மூதன்முறையாக யாழ். பல்கலைக் கழகத்தில் சமூகவியலை முதலாம் வருட மாண கல்வியாண்டில் இருந்து அனுமதிக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளனர் (05)

# தங்கம் கொண்டு வந்தவர் இராணுவத்தால் கைது

(வவுனியா)

கொழும்பிலிருந்து தங்கம் கொண்டு வந்த வடபகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் பெண் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 4ஆம் திகதிகொழும்பிலிருந்து இரண்டு கட்டித் தங்கம் (பிஸ்கட் பவுண்) மற்றும் மூன்று சிங்கப்பூர் சங்கிலி கொண்டு வந்தவரே கைதானார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த கதிரமலை புஷ்பமலர் (47) என்பவரே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரின் தற்போதைய நிலைபற்றி அறியப்படவில்லை. (தி)

திருமறைக் கலாமன்றம்

நடாத்தும்

## சித்திரக் கண்காட்சி

மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது

இன்று (7-10-92) காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை

இடம்:


திருமறைக் கலாமன்றக் கலைக்கூடம்

238, பிரதான வீதி,

யாழ்ப்பாணம். (சி-5181)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 28 — 11 — 1959



வீரச்சாவு: 07 — 10 — 1986

## கப்டன் றொபின்

[செல்வரெட்ணம் இராச்பகவான்]

(திருக்கோணமலை)

உதிரமதில் விடுதலையை கலக்க வைத்து
உள்ளமது கலங்காத வீரம் பெற்று
வீரசொர்க்கம் அடைந்து விட்ட வீரவேங்கை
வீரக்கல் நாட்டுகின்ற மேன்மை பெற்று
மேலான தமிழினத்தின் வீரம் நாட்டி
மலர்ந்துவரும் தமிழீழ மண்ணின் மீது
மக்களது மனத்தென்றும் வாழ்க வீர!

[சி-5180] திருமலை மக்கள்

ளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பொலிஸ் தற்கொலை

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய விடுதியில் இருந்த றிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிளான வன்னிநாயக ராஜபக்ஸ (வயது 22) என்பவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நிக்கரவெட்டியைச் சேர்ந்த மேற்படி கான்ஸ்டபிள் வயிற்றுவலி காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விசாரணை டிசம்பரில்

கொழும்பில் கூட்டுப் படைகளின் தலைமையகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணைகள் டிசம்பர் ஏழாம் திகதி ஆரம்பமாகும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி கூறியுள்ளார்.

மூன்று பெண்கள் உட்பட ஆறுபேர் மீது குண்டுவெடிப்பு தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன

### வடபகுதி

தேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் சேவையாற்றுகிறது. மற்றைய சப்பலான குமாரி அரசின் செலவில் சேவையாற்றுகிறது.

இவ்விரு கப்பல்களில் குமாரியின் சேவையை இடை நிறுத்தி வைக்க அரசு முயற்சி செய்து வருகிறது. இச்சுப்பலில் குடாநாட்டில் உள்ள தனியார் வர்த்தகர்கள், மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு முற்பணத்துடன் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டம் சாத்தியப்படாத பட்சத்தில் மேற்படி சப்பலின் சேவையை இடை நிறுத்தி வைப்பதற்கு மூடிவெடுக்கப்படும் என்று கொழும்பில் இருந்து எமக்குக் கிடைத்தசெய்திகள் தெரிவிக்கின்றன

### சென்ற

க்கு எழுதிய கடிதத்தில்; உலர் உணவு அரைவாசியாகக் குறைக்கப்பட்டதால் கஷ்டப்படும் மக்கள் இவ் அரைவாசி உலர் உணவு கூட உரிய நேரத்தில் வழங்கப்படாமையினால் மேலும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றை நன்கு தெரிந்திருந்தும் இது குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்காததையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். இக கொடுப்பனவை உரிய காலத்தில் கொடுக்காமல் தடைசெய்த அரச ஊழியர் யாராயிருந்தாலும் அவர்களை பூரண விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கோட்டத்தில் 10ஆம், 11ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் மருதனார்மடம் கோட்டத்தில் 13ஆம், 14ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சிக்கோட்டத்தில் 15ஆம், 16 ஆம் திகதிகளில் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சிக் கோட்டத்தில் 19ஆம், 20ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. கருத்தரங்கு முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறித்த கோட்டத்திலுள்ள சகல பாடசாலை சமூகக்கல்வி ஆசிரியர்களையும் சமூகக்கல்வி ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## தஞ்சாவூரில் ஒருவர் கைது

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் எனச்சொல்லப்படும் ஒருவர் தஞ்சாவூரில் கைது செய்யப்பட்டிருப்பதாக தமிழகப் பொலிசார் கூறியுள்ளனர். இவரிடமிருந்து வெளிநாட்டுத் துப்பாக்கி, நாற்பது சுற்று ரவைகள், டெட்டனேற்றர், சயனைட் குப்பி போன்றன பொலிசாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### குமாரி

தபால், மற்றும் சில பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன என யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (பா)

### மண்ணெய்

கூட்டுறவு சங்கங்களையும் யாழ் அரச அதியர் கா. மாணிக்கவாசகருடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் 3000 மெற்றிக் தொன் வரை மண்ணெய் எடுத்துவரலாம் என மேலும் தெரியவருகின்றது. (பா)

### சிறிலங்கா

போதல், எதிர்க்கட்சிபாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறைக்கப்படுதல் அல்லது அகற்றப்படுதல், மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதுகாப்புப்படையைச் சேர்ந்தோருக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவே சர்வதேசப் பாராளுமன்றின் மனித உரிமைகள் குழு சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்குழுவிடம் விசாரித்துள்ளது.

சுவீடனில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 101 நாடுகளைச் சேர்ந்த 1400 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வேப்பங்குளம், பரியாரிக் கண்டல், முருங்கன் ஆகிய இடங்களில் தரித்து நின்ற இராணுவத்தினர் மன்னார், மதவாச்சி வீதி வழியாக சென்று உயிலங்குளத்திலும்,

பாலைப்பெருமாள் கட்டு, வட்டக்கண்டல் ஆட்காட்டி வெளி, அடம்பன் ஆகிய பகுதிகளில் இருந்த இராணுவத்தினர் மாந்தை அடம்பன் வீதி வழியாகச் சென்று அடம்பனிலும் தரித்து நிற்கின்றனர்

நானாட்டானிலிருந்து சூரிய கட்டைக்காடு, இலந்தைமோட்டை வீதி வழியாக உயிலங்குளம் அடங்கிய பகுதியிலும், சிறுநாவற்குளத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் உயிலங்குளம் பாலைக்குழி அடம்பன் அடங்கிய வீதி வழியிலும் தரித்து நிற்கின்றனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி ஆண்டான்குளம் பகுதியில் ஓர் இராணுவ வாகனம் வெடித்துச் சிதறியதற்கான தடையங்கள் காணப்படுகின்றன. நேற்றுமுன்தினம் பின்வாங்கிச் சென்றபோது கள்ளியசட்டைக்காட்டுப் பகுதியில் வாகனக் கண்ணியில் சிக்கி ஓர் இராணுவ வாகனம் சிதறியுள்ளது. இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

### அத்தியாவசிய

கருவிமூலம் தொடர்பு கொண்டு உரையாடினார். இவ் உரையாடலின் போதே மேற்படி நிபந்தனை விதிக்கப்பட்டது.

வழமையாக திறைசேரியூடாக அத்தியாவசிய சேவைகள் பகுதியினருக்கு பணம் வழங்கப்படும் இப்பணத்தைப் பெற்றுக் கொண்ட அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் யாழ் குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைப்பர். ஆனால் தறபோது குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்குத்தேவையான பணத்தை முன்கூட்டியே தமக்கு வழங்குமாறு அத்தியாவசிய சேவைகள்ஆணையாளர் யாழ் அரச அதிபரைப் பணித்துள்ளார்.

திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து மூவாயிரம் மெற்றிக் தொன் மா கப்பல் மூலம் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமாயின் மேற்படி அளவு மாவின் பெறுமதியான சுமார் ஐம்பது மில்லியன் ரூபாவை முன்கூட்டியே அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டிருக்கிறது.

மேற்படி பணத்தை அனுப்பி வைப்பதற்கு யாழ் அரச அதிபர் நடவடிக்கை எடுக்கஇருப்பதாகயாழ் செயலகத்திலிருந்து எமக்கு இறுதியாக கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. (க),(பா)

3,4,5, அதிகீழ் பிரிவு, ஆண்டு 6,7 கீழ்ப்பிரிவு, ஆண்டு 8,9 கனிஷ்டபிரிவு, ஆண்டு 10.11, 11 மீட்டல் வகுப்பு மேற்பிரிவு, ஆண்டு 12, 13, 13 மீட்டல் வகுப்பு அதி மேற்பிரிவு என

இப் போட்டிகளை நடாத்துவதில் பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்களின் ஒத்துழைப்பை மாணவர் அமைப்பு கோரியுள்ளது.

### கொழும்பில்

## தூதுவராலயங்களை திறக்க அராபிய நாடுகள் தயக்கம்

(கொழும்பு)

அரேபிய நாடுகள் பல கொழும்பில் தமது தூதுவராலயங்களைத் திறக்கத் தயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

சிறிலங்கா அரசு இது தொடர்பாக அரேபிய நாடுகளுடன் பல முறை தொடர்புகொண்டும் அந்த நாடுகள் சிறிலங்கா அரசின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கவில்லை என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

கொழும்பில் ஈரான், ஈராக், எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகளும், பலஸ்தீனிய விடுதலை இயக்கமுமே தமது தூதுவராலையங்களை நிறுவியுள்ளன. குவைத், ஐக்கிய அரபு எமிரேட்டுகள், சவூதி அரேபியா, பஹரேன், ஓமான்; டோகா ஆகிய வளைகுடா நாடுகளில் இலங்கையர் அதிகமாகத் தொழில் பார்ப்பதால் இந்த நாடுகள் தமது தூதுவராலயங்களைத் திறக்க வேண்டும் என்பது கொழும்பின் எதிர்பார்ப்பாகும், இந்த நாடுகளுக்கு சிறிலங்காவுக்கும் இடையில் வர்த்தக உறவுகள் நெருக்கமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகும் வளைகுடா நாடுகள் கொழும்பில் தமது தூதுவராலயங்களைத் திறப்பதற்குத் தயக்கம் காட்டும் காரணம் தெரியவில்லை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இதே வேளை, இந் நாடுகளில் சிறிலங்கா தனது தூதுவராலங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடனான சர்ச்சை சார்க்கை பாதிக்காது

(டாக்கா) — பிரேமா

இந்தியாவுடனான சர்ச்சைகள் சார்க் அமைப்பை பாதிக்காது என்று டாக்காவில் செய்தியாளர்களிடையே பேசிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; இந்தியாவுக்கும் சார்க் அமைப்பில் இடம் பெற்றுள்ள ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் இடையிலான சர்ச்சைகள் அந்த அமைப்பின் உயிர் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமையாது என்று குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு

கின்றது என்றும் தெரிய வருகிறது

இதேவேளை கடந்த ஆண்டு பாதுகாப்புச் செலவினமாக 1520 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாயும், இவ்வாண்டு இது 1700 கோடி ரூபாவுக்கு மேல் அதிகரிக்கலாம் எனவும் அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டிக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 06-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6008

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-9744, 26-4885, 28-7261, 26-8917, 28-3528 26-6691, 27-9105, 40-5216, 22-7011, 24-9858, 26-767

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

41-5919, 27-922, 28-6623, 24-3897, 26-7728, 42-3514, 24-7727, 26-1376, 26-403, 26-3667, 42-9220, 26-2827, 26-6026, 24-9489, 24-5774, 27-7653, 24-7225, 26-1658, 24-6639, 24-6437.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது